


**28. 05. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் இணையவழி குற்றங்களை எதிர்கொள்ள காவல்துறையினர் முனைப்புடன் செயலாற்ற வேண்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. CBSE 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு மறு மதிப்பீட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

3. தியாகத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை, இஸ்லாமிய பெருமக்களால் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

4. முதலமைச்சர் திரு.விஜய் டெல்லி பயணத்தை நிறைவு செய்து இன்று சென்னை வந்தடைந்தார்..

5. தமிழ்நாட்டில் புதிய தொழில் தொடங்க 21 நாட்களில் அனுமதி வழங்கப்படும் என்று மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா அறிவித்துள்ளார்.

இனி விரிவான செய்திகள்

**************

குடியரசு தலைவர்

நாட்டில் இணையவழி குற்றங்கள் ஆன்லைன் மோசடி உள்ளிட்டவற்றை எதிர்கொள்ள காவல்துறையினர் தயாராக இருக்க வேண்டும் என குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

சிக்கிம் காங்டாக்கில் குடியரசு தலைவரின் காவல்துறை வண்ணம் வழங்கும் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், குடிமக்களை மையமாக கொண்டு காவல்துறையினர் செயல்பட வேண்டும் என்றும், பெண்கள், ஏழை எளியோர், குழந்தைகளிடம் காவல்துறையினர் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதிலும், பேரிடர்களை சமாளிப்பதிலும் காவல்துறையினரின் பங்கை எடுத்துரைத்தார்.

சிறந்த சேவை, ஒழுக்கம் தேசத்திற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்காக வழங்கப்படும் மிக உயரிய கவுரவ விருதான குடியரசு தலைவரின் காவல்துறை வண்ணம் விருதை பெறும் நாட்டின் 15ஆவது மாநிலமாகவும் வடகிழக்கு பகுதியில் 3ஆவது மாநிலமாகவும் சிக்கிம் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

**************

தர்மேந்திர பிரதான்

CBSE 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு மறு மதிப்பீட்டு பணிகள் வெளிப்படை தன்மையுடன் தற்போது தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

CBSE அதிகாரிகளுடன் புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்ட பின் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மதிப்பீட்டு முறையில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ள நிலையில் இந்நடவடிக்கை என்றார்.

எந்த ஒரு மாணவரின் சந்தேகமும் தீர்வு காணாமல் விடுப்படக்கூடாது என்பதில் உறுதியுடன் உள்ளதாக கூறினார்.

தேர்வுகள் தொடர்பான முரண்பாடுகளுக்கு பொறுப்பேற்றுக்கொண்ட கல்வி அமைச்சர், இதுபோன்ற விவகாரங்கள் வரும் காலங்களில் சரி செய்யப்படும் என்றார்.

வெளிப்படைத்தன்மையுடன் கூடிய திரை வழி மதிப்பீட்டு முறைளை CBSE அறிமுகப்படுத்தியுள்ளதாக அமைச்சர் கூறினார்.

40 கோடி Scan செய்யப்பட்ட தேர்வு தாள்கள் திரை வழி மதிப்பீட்டு முறைக்கு முதல்முறையாக உட்படுத்தப்பட்டதாக கூறினார்.

இம்முறை நடைமுறைக்கு வந்துள்ளதன் மூலம் மாணாக்கர் தங்களது Scan செய்யப்பட்ட விடைத்தாள்களின்

பிரதிகள் மற்றும் மதிப்பெண்களை நேரடியாக அறிந்துகொள்ள முடியும் என்றார்

**************

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

நாட்டின் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதிலும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலும், மக்களுக்கு சத்தான உணவு கிடைப்பதிலும் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

கரீஃப் பருவத்திற்கான தேசிய வேளாண் மாநாட்டை புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், மாநிலங்கள் எதிர்கொள்ளும் எத்தகைய இடர்பாடுகள் அல்லது பிரச்சனைகள் குறித்தும் அதிகாரிகளுடன் விரிவான கலந்தாலோசனை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

விவசாயிகளின் கடின உழைப்பு, மத்திய அரசின் திட்டங்கள், பிரதமரின் தொலைநோக்கு பார்வை, கொள்கைகள், நமது விஞ்ஞானிகள் உருவாக்கிய புதிய விதை இனங்கள் மாநிலங்களின் அயராத முயற்சிகள் ஆகியவற்றின் விளைவாக விவசாய உற்பத்தியில் முந்தைய சாதனைகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

**************

பக்ரீத் பண்டிகை

தியாகத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை, இஸ்லாமிய பெருமக்களால் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில் அன்பு சமூக நல்லிணக்கத்தை இந்நாள் கொண்டுவரட்டும் என வாழ்த்தியுள்ளார்.

பிரதமர் வெளியிட்ட செய்தியில் சகோதாரத்துவமும், மகிழ்ச்சியும் சமூகத்தில் தழைத்தோங்கட்டும் என குறிப்பிட்டுள்ளார்.

தமிழக ஆளுநர் திரு.ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர், முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய், திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி உள்ளிட்டோர் இஸ்லாமிய பெருமக்களுக்கு பக்ரீத் வாழ்த்துக்களை உரித்தாக்கியுள்ளனர்.

இத்தினத்தை ஒட்டி உலக பிரசித்தி பெற்ற நாகூர் தர்கா, நெல்லை, தூத்துக்குடி காயல்பட்டினம், ராமநாதபுரம், கோவை, திருப்பத்தூர் வாணியம்பாடி, தர்மபுரி, ராணிப்பேட்டை, திருச்சி உழவர் சந்தை, உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இஸ்லாமியர்கள் சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர்.

தென்காசியில் நடைபெற்ற தொழுகை குறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

**************

வெளியுறவு அமைச்சகம்

இந்தியா சீனா எல்லை பாதுகாப்பு நிலவரம் திருப்தி கரமாக இருப்பதாக இரு நாடுகளும் தெரிவித்துள்ளன.

எல்லை பாதுகாப்பு தொடர்பான 35ஆவது கூட்டம் பெய்ஜிங்கில் நடைபெற்ற நிலையில் கிழக்காசியாவிற்கான இணை செயலர் தலைமையிலான இந்திய பிரதிநிதி குழு இக்கூட்டத்தில் பங்கேற்றது.

இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விவாதங்கள் பயனுள்ள வகையில் அமைந்ததாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

எல்லை பகுதியில் ஆறுகள் தொடர்பான ஆலோசனைகளை மேற்கொள்ள அடுத்த கூட்டத்தை விரைவில் கூட்டுமாறு இந்தியா தரப்பில் வலியுறுத்தப்பட்டதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

**************

கர்நாடகம்

கர்நாடக மாநில முதலமைச்சராக திரு.டி.கே. சிவகுமார் பொறுப்பேற்க உள்ளதாக அம்மாநில அரசின்

சட்டம் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. H.K.பாட்டில் தெரிவித்துள்ளார்.

பெங்களுருவில் அம்மாநில முதலமைச்சர் திரு.சித்தராமைய்யா இல்லத்தில் இன்று காலை விருந்தில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திரு.சித்தராமய்யா தனது ராஜினாமைா கடிதத்தை இன்று பிற்பகல் ஆளுநர் மாளிகையில் சமர்ப்பிக்க உள்ளதாக கூறினார்.

காங்கிரஸ் மேலிட உத்தரவிற்கு ஏற்ப இந்நடவடிக்கை என்றார்.

முன்னதாக திரு.சித்தராமய்யா இல்லத்தில் நடைபெற்ற விருந்தில், துணை முதலமைச்சர் திரு.டி.கே.சிவகுமார், மாநில அமைச்சர்கள் பங்கேற்றனர்.

**************

கியூட்

மத்திய பல்கலைகழகங்களில் இளநிலை பட்டப்படிப்பு மாணாக்கர் சேர்க்கைக்கான கியூட் நுழைவு தேர்வு வரும் 31ஆம் தேதி மற்றும் அடுத்த மாதம் 6, 7 ஆம் தேதிகளில் நடைபெற உள்ளதாக தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

முன்னதாக இன்று நடைபெறுவதாக இருந்த தேர்வுகள் பக்ரீத் பண்டிகை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

தேர்வர்கள் தங்களது நுழைவு சீட்டுகளை cuet.nta.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு இம்முகமை கூறியுள்ளது.

**************

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.விஜய் டெல்லி பயணத்தை நிறைவு செய்து இன்று சென்னை புறப்பட்டார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் ஆகியோரை நேற்று சந்தித்த முதலமைச்சர் தமிழக மீனவர் பிரச்சனை, மேகதாது அணை, தமிழ்த்தாய் வாழ்த்து உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பான மனுக்களை அளித்தார்.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் திரு.கிறிஸ்டோபர் திலக் வரும் 11ஆம் தேதி நித்தி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்க முதலமைச்சர் புதுதில்லி வரும்போது காங்கிரஸ் தலைவர்களை சந்திப்பார் என தெரிவித்தார்.

**************

கீர்த்தனா

தமிழ்நாட்டில் புதிய தொழில் தொடங்க 21 நாட்களில் அனுமதி வழங்கப்படும் என்று மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா அறிவித்துள்ளார்.

அமைச்சர் வெளியிட்ட காணொலி பதிவில் மாநிலம் முழுவதும் விரைவு தொழில் மண்டலம் அமைக்கப்படும், என்றும் அடுத்த தலைமுறையினருக்கு ஏற்ற சூழலை உருவாக்குவதற்கு மாநில அரசு முன்னுரிமை அளித்து வருவதாகவும் கூறியுள்ளார்.

அதிவேக செயல்பாட்டை முன்னெடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக கூறிய அவர், ஒற்றை சாளர ஒப்புதல், அமைச்சர்கள் மற்றும் நேரடியாக பிரச்சனைகளை கொண்டு செல்லும் முறை உள்ளிட்ட வாக்குறுதிகளை குறிப்பிட்டார்.

*************

வெல்லமண்டி

அஇஅதிமுக முன்னாள் அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன் இன்று த.வெ.க-வில் இணைந்துள்ளார்.

அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் நான்கு பேர், வெற்றிபெற்ற மூன்று வாரங்களுக்குள் தங்களது பதவியை ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைந்திருக்கும் சூழலில் திரு.வெல்லமண்டி நடராஜன் தற்போது இணைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

*************

வெப்ப அலை

நாட்டு மக்கள் அனைவரும் வெப்ப அலையிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி அறிவுறுத்தியுள்ள நிலையில் திருச்சியை சேர்ந்த டாக்டர் கமல் தற்காப்பு வழிமுறைகள் குறித்து எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்

வாய்ஸ்

*************

கண்டலேறு அணை

ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து கிருஷ்ணா நதியில் திறக்கப்பட்ட ஆயிரத்து 900 கன அடி தண்ணீர் தமிழக எல்லையுள்ள ஊத்துக்கோட்டை, தாமரைக்குளம் ஸீரோ பாய்ன்ட்டுக்கு இரவு வந்தடைந்தது.

இன்றுமாலைக்குள் இந்த தண்ணீர் பூண்டி சத்தியமூர்த்தி நீர் தேக்கத்தை சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**************

இருவரி

நாமக்கல் மாவட்டத்தில் வீர தீர செயலுக்கான கல்ப்பனா சாவ்லா விருது பெற தகுதியுடையோர் வரும் 19ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி கூறியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் சித்தோடு ஆர்.என்.புதூர் பகுதியில் போதை பொருள் விற்பனையில் ஈடுபட்ட இரண்டு பேரை காவல்துறையினர் கைது செய்ததோடு, அவர்களிடமிருந்து 6 கிலோ போதை பொருள் மற்றும் துப்பாக்கி பறிமுதல் செய்யப்பட்டது.

**************

டென்னிஸ்

பிரஞ்ச் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர், ஜப்பானின்

Takeru Yuzuki இணை – சுவிட்சர்லாந்து இங்கிலாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி, ரஷ்யாவின் அலெக்ஸாண்ட்ரா இணை இன்று களமிறங்குகிறது.

**************

பேட்மிண்டன்

சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிண்டன் ஒற்றையர் காலிறுதிக்கு மகளிர் பிரிவில் இந்தியாவின் பி.வி.சிந்துவும்,

ஆடவர் பிரிவில் லக்சயா சென்னும் முன்னேறியுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு ரான்கி ரெட்டி சிராக்ஷெட்டி இணையும்,

கலப்பு இரட்டையர் காலிறுதிக்கு துருவ் கபிலா, டனிஷா கிறாஸ்டோ இணையும் முன்னேறியது.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது